# அம்மா மக்கள் முன்னேற்றக் கழக

## செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

***

07.10.2024 – திங்கள் கிழமை

மஹாராஜா மஹால், தஞ்சாவூர்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

சென்னை - 600 014

| தீர்மானம் எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களாய் கழகப் பொதுச்செயலாளர் அவர்களின் தலைமையில் தொடர்ந்து பயணிப்போம்! | 1 |
| 2 | வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்து மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ள பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கு வாழ்த்து! | 2 |
| 3 | தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கும், தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும் நன்றி! | 3 |
| 4 | அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் நிர்வாக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புகளுக்கு ஒப்புதல்! | 4 |
| 5 | தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 5-6 |
| 6 | வரிகள் உயர்வு மற்றும் கட்டணங்களின் உயர்வால் மக்கள் மீது சுமையை ஏற்றும் தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 7 |
| 7 | படிப்படியாகவாவது டாஸ்மாக் கடைகளை மூடிடுக - போதைப் பொருட்களால் பாழாகும் இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க தவறும் தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 8-9 |


அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| தீர்மானம் எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 8 | சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தி.மு.க அரசை வலியுறுத்தல்! | 10 |
| 9 | இலங்கையிடம் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்க மத்திய அரசை வலியுறுத்தல்! | 11 |
| 10 | சட்டம்-ஒழுங்கு சீரழிவு தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 12 |
| 11 | மக்கள் விரும்பாத திட்டங்களை செயல்படுத்தும் தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 13-14 |
| 12 | இதயதெய்வம் அம்மா அவர்களின் திட்டங்களை முடக்கியும், பல திட்டங்களின் பெயர்களை மாற்றியும் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 15 |
| 13 | கூட்டணி தர்மத்திற்காக மாநில உரிமையை தாரைவார்க்கும் தி.மு.க அரசுக்கு கண்டனம்! | 16-17 |
| 14 | 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில் வெற்றி பெற அனைத்து நிலைகளிலும் ஆயத்தமாவோம்! | 18 |


அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014 ★

# தீர்மானம் - 1

தமிழ்ச் சமூகத்தை விழிப்படையச் செய்ய தன்னலம் துறந்து அயராது உழைத்த பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், தாய் நாட்டிற்கு தமிழ்நாடு என பெயர்சூட்டி, தமிழுக்கும் தமிழக மக்களுக்கும் பெருமை தேடித்தந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களையும் இப்பொதுக்குழு வணங்குகிறது.

நாட்டு மக்களின் இதயக் கோவிலில் நிரந்தரமாக குடியிருக்கும் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், சவால்களைக் கண்டு துவளாமல், தமிழகத்தின் நலனை மட்டுமே இலக்காய் கொண்டு, இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் வியக்கும் வண்ணம் தமிழகத்திற்கு ஈடு இணையற்ற இடத்தை பெற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களையும் இப்பொதுக்குழு போற்றி வணங்குகிறது.

நம் அன்பில் நிறைந்த மகத்தான தலைவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில் தொடர்ந்து பயணித்து வரும் கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் தலைமையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டர்களாக எந்நாளும் பயணித்திடுவோம் என இப்பொதுக்குழு சூளுரைக்கிறது.

**முன்மொழிபவர்** | **திரு.C.கோபால்** அவர்கள்,
கழக தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 2

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வலிமையான கூட்டணியை அமைத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்து, மூன்றாவது முறையாக பாரதப் பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கு இப்பொதுக்குழு தனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தெளிவான பார்வை மற்றும் தொலைநோக்கு சிந்தனையால் உலக நாடுகளின் மத்தியில் நம் நாட்டிற்கு பெருமை தேடித் தந்திருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான நல்லாட்சியில், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை விரைவிலேயே அடைய இப்பொதுக்குழு தனது முழுமையான ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.C.சண்முகவேலு** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>திருப்பூர் புறநகர் மாவட்டக் கழக செயலாளர்,<br>முன்னாள் அமைச்சர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 3

பணபலம், ஆட்சி அதிகாரம், அதிகார துஷ்பிரயோகம், அடிப்படை ஆதாரமற்ற அவதூறுகள் என தி.மு.கவின் அராஜகங்களுக்கும், அத்துமீறல்களுக்கும் அடிபணியாமல் மக்கள் நலனை மட்டுமே குறிக்கோளாய் கொண்டு தேர்தலை நேர்மையாகவும், நியாயமாகவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி எதிர்கொண்டது.

ஆளுங்கட்சியின் பொய்ப் பிரச்சாரங்களுக்கும், மிரட்டல்களுக்கும் அடிபணியாமல் தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு துணிச்சலுடன் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் இப்பொதுக்குழு தனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறது.

உண்ண மறந்து, உறக்கம் தொலைத்து ஒவ்வொரு நிமிடமும் தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்காக உழைத்திட்ட கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் இப்பொதுக்குழு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.M.ரெங்கசாமி** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 4

கழக சட்ட விதிகளின்படி நடைபெறும் இப்பொதுக்குழு, கழகத்தின் விதி 9 (பிரிவு 1)-ன் படி அமைக்கப்பெற்ற 94 கழக மாவட்டங்கள் நிர்வாக வசதிக்காக 91 மாவட்டக் கழகங்களாக கழக பொதுச்செயலாளர் அவர்களால் மறுசீரமைக்கப்பட்டதை இப்பொதுக்குழு ஒருமனதாக அங்கீகரிக்கிறது.

மேலும், 07.10.2024-க்கு முன்பாக வெவ்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு பொறுப்புகளில் இருந்த நிர்வாகிகள் மீது கழக பொதுச்செயலாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளையும், கழக பொறுப்புகளுக்கு செய்யப்பட்ட மாறுதல்களையும் மற்றும் புதிய நியமனங்களையும் இப்பொதுக்குழு அங்கீகரிக்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.G.செந்தமிழன்** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்,<br>கழக செய்தி தொடர்பாளர்,<br>முன்னாள் அமைச்சர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 5

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடி, நூறு நாள் வேலைத்திட்டம் 150 நாட்களாக அதிகரிக்கப்படும், கல்விக்கடன் தள்ளுபடி, அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும், பழைய ஓய்வூதியத் திட்டம், பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம், சமவேலைக்கு சம ஊதியம், கேஸ் சிலிண்டருக்கு மானியம் என தேர்தலுக்கு முன்பாக அளித்த வாக்குறுதிகளில் எதையுமே தி.மு.க அரசு இன்று வரை நிறைவேற்றவில்லை.

எப்போதெல்லாம் தி.மு.க ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் மின் தடையும் சேர்ந்து வரும் என்பது கடந்தகால வரலாறு. மின் தடையோடு, மின் கட்டணத்தையும் உயர்த்தி தொழில் நிறுவனங்களை முடக்கியதோடு, ஏழை, எளிய மக்களின் அடிமடியிலும் கை வைத்திருக்கிறது தி.மு.க அரசு. “மின்சாரம் தர வக்கில்லை, மின் கட்டணத்தை உயர்த்த வெட்கமில்லை” என்ற இதயதெய்வம் அம்மா அவர்களின் முழக்கம் தான் தி.மு.க அரசுக்கு எக்காலத்திற்கும் பொருந்தும் வாக்கியமாக அமைந்திருக்கிறது.

மாதம் ஒரு முறை மின் கட்டணம் கணக்கிடும் முறை நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் அறிக்கையில் 221-வது வாக்குறுதியாக அளித்திருந்த தி.மு.க, தற்போது ஏற்கனவே வழங்கி வந்த 100 யூனிட் இலவச மின்சாரத்தையும் நிறுத்த முடிவெடுத்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு விபத்துக்கள் நடைபெறாத நாளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அடிக்கடி ஏற்படும் விபத்துக்களால் அப்பாவி தொழிலாளர்கள் பலர் தங்களின் விலைமதிப்பற்ற உயிரை இழந்து வருகின்றனர். பத்துலட்சம் மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் பட்டாசுத் தொழிலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வாக்குறுதியளித்த திமுக, அதற்கான எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையையும் இதுவரை எடுத்ததாக தெரியவில்லை.

தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் சாதாரண பொதுமக்கள் தொடங்கி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், விவசாயிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைத்து தரப்பினருமே நாள்தோறும் வீதிக்கு வந்து போராடும் சூழல் தான் தற்போது நிலவுகிறது.

தமிழகத்தையும், தமிழக மக்களையும் இருளில் மூழ்கடித்துவிட்டு தங்களது குடும்பத்திற்கு மட்டும் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டிருக்கும் தி.மு.க. அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தை பதிவு செய்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்** | **திரு.S.V.S.P.மாணிக்கராஜா** அவர்கள்,<br>கழக துணை பொதுச்செயலாளர்,<br>கயத்தாறு ஒன்றியக் குழு பெருந்தலைவர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 6

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களைத் துன்பப் படுத்துவதற்கான அனைத்து வழிகளையும் கண்டறிந்து, அவர்களின் மீது தாங்க முடியாத அளவிற்கான பொருளாதார சுமையை தி.மு.க அரசு ஏற்றி வருகிறது.

மின்சாரக் கட்டணம், பால் விலை, பள்ளி மாணவர்களின் பாடப்புத்தகங்களின் விலை, கட்டுமானப் பொருட்களின் விலை, சாலைவரி, சொத்துவரி, குடிநீர் வரி, தொழில் வரி, வீடுகளுக்கான வரைபட கட்டணம், பத்திரப்பதிவு கட்டணம், நில வழிகாட்டு மதிப்பு என அனைத்து விதமான கட்டணங்களையும், வரிகளையும் பன்மடங்கு உயர்த்தி மக்களை துன்பத்திற்குள்ளாக்கிய தி.மு.க அரசு, தற்போது மீண்டும் தமிழகம் முழுவதும் சொத்து வரியை 6 சதவிகிதம் உயர்த்துவது தொடர்பான தீர்மானத்தை சென்னை மாநகராட்சியின் மூலம் தொடங்கி வைத்திருக்கிறது.

நிர்வாகத் திறமையின்மைக்கும், மோசமான ஆட்சிக்கும் உதாரணமாக திகழும் தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **வீரபாண்டி திரு.S.K. செல்வம்** அவர்கள்,<br>கழக பொருளாளர், சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர்,<br>முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br><br>**திரு.வேலு.கார்த்திகேயன்** அவர்கள்,<br>கழக வழக்கறிஞர் பிரிவு செயலாளர்,<br>Vice Chairman–Bar Council of Tamil Nadu and Puducherry |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 7

மதுவினால் ஏற்படும் தீமைகளை அறவே துடைக்கும் நோக்கில் படிப்படியாக மதுவிலக்கைக் கொண்டுவர நம் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் பெருமுயற்சி எடுத்தார்கள்.

ஆண்டுக்கு 500 டாஸ்மாக் கடைகளை மூடும் வகையில், 2016ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தனது முதல் கையெழுத்தாக 500 டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட்டார்கள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். அதன் பின்னர் பதவிக்கு வந்த பழனிசாமியின் அரசும், தி.மு.க அரசும் அதனைத் தொடர்ந்திருந்தால் பல்லாயிரக்கணக்கான டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டிருக்கும்.

பூரண மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று தேர்தல் நேரத்தில் தெரிவித்துவிட்டு, தற்போது அதற்கான அறிகுறியே இல்லாத வகையில்தான் தி.மு.க அரசு செயல்படுகிறது.

மதுவினால் ஏற்படும் தீமைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தி.மு.க அரசு அமைந்ததிலிருந்து, தமிழகத்தில் பட்டிதொட்டியெங்கும் பரவியிருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் தாராளப்புழக்கம், பள்ளி, கல்லூரி மாணவர்களின் எதிர்காலத்தை சீர்குலைத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முறை கொடியவகை போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யும் போதெல்லாம் அதில் தி.மு.க.வினருக்கு தொடர்பிருப்பதை நாளிதழ்களிலும், ஊடகங்களிலும் வெளியாகும் செய்திகள் உறுதிபடுத்துகின்றன.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

பள்ளி, கல்லூரி மாணவர்களை குறி வைத்து விற்கப்படும், போதை மாத்திரை, போதை ஊசி உள்ளிட்ட போதை வஸ்துகள் தமிழகத்தில் அதிகரிக்கும் குற்றச் சம்பவங்களுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

நாட்டின் எதிர்கால தலைமுறையான இளைய சமுதாயத்தின் மீது துளியளவும் அக்கறையின்றி செயல்படும் தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **தொட்டியம்.திரு.M.ராஜசேகரன்** அவர்கள்,<br>கழக தலைமை நிலைய செயலாளர்,<br>திருச்சி புறநகர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்,<br>கழக செய்தி தொடர்பாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br><br>**டாக்டர்.A.சதீஷ்குமார்** அவர்கள்,<br>கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர்,<br>செங்கல்பட்டு மத்திய மாவட்டக் கழக செயலாளர்<br><br>**திரு.A.நல்லதுரை** அவர்கள்,<br>கழக மாணவர் அணி செயலாளர், கழக செய்தி தொடர்பாளர்<br><br>**திருமதி. B.ஜீவிதா நாச்சியார்** அவர்கள்,<br>கழக மாணவியர் அணி செயலாளர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

# தீர்மானம் - 8

அனைத்து சமூக மக்களும் தங்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு ஒரே தீர்வு சாதிவாரி கணக்கெடுப்பு மட்டும்தான்.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் வாய்ப்பு மறுக்கப்பட்டோரின் உரிமைக்காக பொங்கி எழுந்ததுதான் திராவிட இயக்கம்.

எல்லோரும் எல்லா வாய்ப்பும் பெற வேண்டும் என்ற உயர்ந்த உன்னத நோக்கத்தோடு 69% இட ஒதுக்கீட்டைக் கொண்டுவந்து, அதற்கு அரசமைப்பு பாதுகாப்பை பெற்றுத் தந்ததும் நம் புரட்சித்தலைவி அம்மா அவர்களே.

பல்வேறு மாநில அரசுகள் தாங்களே சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தும்போது, தி.மு.க அரசு அதனை தட்டிக்கழிக்கும் வகையில் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது. இப்போக்கினை ஆளும் தி.மு.க அரசு மாற்றிக்கொண்டு உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பை விரைந்து நடத்திட வேண்டும் என இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு.D.K.ராஜேந்திரன்** அவர்கள்,
கழக தலைமை நிலைய செயலாளர்,
தருமபுரி மாவட்டக் கழக செயலாளர்

**அரூர் திரு.R.R.முருகன்** அவர்கள்,
கழக அமைப்பு செயலாளர், கழக ஆட்சி மன்றக் குழுத்தலைவர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை – 600 014

# தீர்மானம் - 9

வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது.

அண்மையில் கூட இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களுக்கு மொட்டையடித்து, சிறைக்கைதிகள் பயன்படுத்தும் கழிவறைகளை சுத்தம் செய்ய நிர்பந்தித்திருப்பது தமிழகம் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தேசத்தையும் அவமானப்படுத்தும் செயலாகும்.

காங்கிரஸ் அரசு கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்த்த போது, கூட்டணியிலிருந்த தி.மு.க வேடிக்கைப் பார்த்ததன் விளைவே, இன்றுவரை தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இலங்கை கடற்படையினர் ஒருபுறமும், இலங்கை கடற்கொள்ளையர்கள் மற்றொரு புறமும் நடத்தும் தொடர் தாக்குதலை தடுக்க எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காத தி.மு.க அரசால், தமிழக மீனவர்கள் கடலுக்கு செல்லவே அச்சப்படும் சூழல் தான் தற்போது நிலவுகிறது.

இந்த அவலத்தை மாற்றி, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நிரந்தர தீர்வான கச்சத்தீவை மீட்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என மத்திய அரசை இப்பொதுக்குழு அழுத்தமாக வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.V.P.குமரேசன்** அவர்கள்,<br>கழக தேர்தல் பிரிவு செயலாளர்<br>**திரு.T.ஆறுமுகம்** அவர்கள்,<br>கழக மீனவர் அணி செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 10

தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளைகள், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், நேர்மையாக இருக்கும் அரசு அதிகாரிகள் மீதான கொடூரத் தாக்குதல்கள், பள்ளி மாணவர்களிடையே அதிகரிக்கும் சாதிய மோதல்கள், தீண்டாமை பெருங்குற்றம் என நாள்தோறும் அரங்கேறும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளே திறனற்ற தி.மு.க அரசின் அலட்சியப் போக்கை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

தமிழகத்தில் சாதாரண பொதுமக்கள் தொடங்கி, தேசிய கட்சியின் மாநிலத் தலைவர் வரை யாருக்குமே பாதுகாப்பில்லாத சூழல் தான் நிலவுகிறது.

மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க முடியாத தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தை தெரிவிக்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**செல்வி.C.R.சரஸ்வதி** அவர்கள்,
கழக கொள்கை பரப்பு செயலாளர்,
முன்னாள் சமூக நல வாரிய தலைவர்

**திருமதி.வளர்மதி ஜெபராஜ்** அவர்கள்,
கழக மகளிர் அணி செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திருமதி.சாருபாலா.R.தொண்டைமான்** அவர்கள்,
கழக அமைப்பு செயலாளர், முன்னாள் மேயர்

**திருமதி.A.விசாலாட்சி** அவர்கள்,
திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர்,
கழக தேர்தல் பிரிவு துணை செயலாளர், முன்னாள் மேயர்

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 11

விவசாயிகளின் அனுமதியின்றி விளைநிலங்களை கையகப்படுத்த மாட்டோம் என ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக வாக்குறுதியளித்த தி.மு.க, விளைநிலங்களை கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவிக்கும் விவசாயிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்கிறது.

சென்னையின் இரண்டாவது விமான நிலையம் பரந்தூரில் அமைக்கப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு வெளியான நாள் முதல் அத்திட்டத்திற்கு எதிராக இன்றுவரை போராடிவரும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத தி.மு.க அரசு, அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளையும், விளைநிலங்களையும் கையகப்படுத்தும் பணிகளை தீவிரப்படுத்தியிருக்கிறது.

தென் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சமுதாயத்தினர் கல்வி அறிவு பெறவும், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்ட கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை பள்ளிக்கல்வித்துறையுடன் இணைக்க தி.மு.க அரசு எடுத்த முடிவுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தி.மு.க அரசின் இம்முயற்சியை அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கண்டித்து வரும் நிலையில், தி.மு.க அரசு தான் எடுத்த முடிவில் தற்போது மௌனம் காக்கிறது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

இப்படியாக, தமிழகத்தில் மக்கள் விரும்பாத திட்டங்களை முன்னெடுப்பதும், எதிர்ப்புகள் கிளம்பியபின் கிடப்பில் போடுவதையுமே வாடிக்கையாக வைத்திருக்கும் தி.மு.க அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு.ம.கரிகாலன்** அவர்கள்,
கழக அமைப்பு செயலாளர், கழக பொறியாளர் அணி செயலாளர்,
செங்கல்பட்டு வடக்கு மாவட்ட கழக செயலாளர்,
காஞ்சிபுரம் மாவட்டக் கழக பொறுப்பாளர்

**திரு.M.கோதண்டபாணி** அவர்கள்,
கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர்,
செங்கல்பட்டு தெற்கு மாவட்டக் கழக செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

**திரு.T.A.ஏழுமலை** அவர்கள்,
திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

# தீர்மானம் - 12

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால் உதித்த திட்டங்கள் அனைத்தையும் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு தி.மு.க அரசு முடக்கி வருகிறது.

தாலிக்குத் தங்கம், தொட்டில் குழந்தைத் திட்டம், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், விலையில்லா சைக்கிள் வழங்கும் திட்டம், அம்மா குடிநீர், அம்மா உப்பு என மக்களுக்கு நேரடியாக பயனளித்த திட்டங்கள் அனைத்தையும் தி.மு.க அரசு திட்டமிட்டு முடக்கியுள்ளது.

ஏழை, எளிய மக்களின் பசியைப் போக்கும் அட்சயப் பாத்திரமாக திகழக்கூடிய அம்மா உணவகங்களுக்கு மூடுவிழா நடத்திவிட்டு கலைஞர் உணவகத்தை திறக்கவும், மலிவு விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்யும் வகையில் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட அம்மா மருந்தகங்களை மூடிவிட்டு தற்போது முதல்வர் மருந்தகம் என திறக்க திட்டமிட்டுள்ளனர்

இப்படியாக நாட்டிற்கே முன்னோடியாக நம் அம்மா அவர்கள் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் கொண்டு வந்த திட்டங்களை முடக்குவதையும், பெயர்களை மாற்றுவதையும், ஸ்டிக்கர் ஒட்டுவதையும் வாடிக்கையாகக் கொண்டிருக்கும் தி.மு.க அரசின் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.K.P.நல்லசாமி** அவர்கள்,<br>திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்<br>**டாக்டர் K.கதிர்காமு** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்<br>**திரு.R.சுந்தரராஜ்** அவர்கள்,<br>கழக அமைப்பு செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014

# தீர்மானம் - 13

உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக தமிழகத்திற்கான காவிரி நீரை உரிய நேரத்தில் வழங்க மறுத்து காவிரி டெல்டா பகுதிகளை பாலைவனமாக்கத் துடிக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசாங்கத்தையும், தென்மாவட்ட மக்கள் மற்றும் விவசாயிகளின் ஜீவாதாரமாக திகழும் முல்லைப் பெரியாற்றில் புதிய அணை கட்டியே தீருவோம் என்ற பிடிவாதப் போக்கில் செயல்படும் கேரள கம்யூனிஸ்ட் அரசாங்கத்தையும் கண்டிக்கக் கூட முடியாத முதலமைச்சரை பெற்றிருப்பது ஒட்டுமொத்த தமிழக மக்களின் சாபக்கேடு.

இதயதெய்வம் அம்மா அவர்களின் தொடர் சட்டப் போராட்டத்தாலும், நீதிமன்றத்தில் வைத்த வலுவான வாதங்களாலும் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தலாம் என்பதோடு, அணையைச் சுற்றிய பகுதிகள் மற்றும் அருகில் இருக்கும் பேபி அணையை பலப்படுத்திய பின்பு 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கியது.

டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க தொடர் சட்டப் போராட்டங்களை நடத்தி, காவிரி மேலாண்மை ஆணையத்தின் இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிடச் செய்தவர் இதயதெய்வம் அம்மா அவர்கள்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் சென்னை - 600 014 ★

இப்படியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போராடிப் பெற்றுத்தந்த மாநில உரிமையை கூட்டணி தர்மத்திற்காகவும், சுயநலத்திற்காகவும் தி.மு.க அரசு தாரை வார்ப்பது தமிழக விவசாயிகளுக்கு இழைக்கும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

ஊருக்கே உணவளிக்கும் விவசாயிகளை உணவின்றி தவிக்கும் சூழலுக்கு தள்ளிய தி.மு.க அரசை இப்பொதுக்குழு கடுமையாக கண்டிப்பதோடு, தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உச்சநீதிமன்றத்தை சட்ட ரீதியாக நாடியும், அண்டை மாநில அரசுகளுடன் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலமாகவும் தமிழகத்திற்கான நீரை உரிய நேரத்தில் பெற்றுத் தர தி.மு.க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், கர்நாடகம் மழைக்காலங்களில் மட்டும் திறந்துவிடும் காவிரியின் உபரி நீர் வீணாக கடலில் கலப்பதைத் தடுக்கும் வகையில், தமிழக விவசாயிகள் முன்வைக்கும் கோரிக்கையான ராசிமணல் பகுதியில் அணைகட்டி காவிரி நீரைப் பயன்படுத்திக்கொள்ள உரிய முயற்சிகளை காலம் தாழ்த்தாமல் செய்ய வேண்டுமென தி.மு.க அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

| | |
|---|---|
| **முன்மொழிபவர்கள்** | **திரு.M.S.சங்கர் (எ) சிவசங்கர்** அவர்கள்,<br>கழக விவசாயப் பிரிவு செயலாளர்<br>**திரு.M.P.சம்பத்** அவர்கள்,<br>கர்நாடக மாநிலக் கழக செயலாளர் |
| **வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்** |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை – 600 014 ★ தலைமைக் கழகம்

# தீர்மானம் - 14

**‘எதுவந்தாலும் ஏற்றுக்கொண்டால் துணிவே துணையாய் மாறும்’** என்ற புரட்சித்தலைவரின் அரசியல் மொழியை தனது குணமாக கொண்டு, நம் அம்மா அவர்கள் புகட்டிய அரசியல் துணிவை தனது வாழ்க்கையாக கொண்டு, நித்தம் நம்மை வழிநடத்தும் கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் தலைமையில் எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு அனைத்து நிலைகளிலும் நாம் ஆயத்தமாவோம்.

நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முன்னெடுத்த மக்கள் நலக்கொள்கைகளை நிலை நாட்டிடவும், தீயசக்தி கூட்டத்தை வீழ்த்திடவும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் அங்கம் பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி மகத்தான வெற்றியினைப் பெற்று தமிழகத்தில் மீண்டும் அம்மா அவர்களின் உண்மையான ஆட்சியை அமைத்திட அயராது உழைப்போம் என இப்பொதுக்குழு உறுதியேற்கிறது.

**முன்மொழிபவர்கள்** | **அனைத்து மாவட்டக் கழக செயலாளர்கள்**

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ சென்னை - 600 014 ★ தலைமைக் கழகம்

# இரங்கல் தீர்மானம்

- உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியும், தமிழ்நாட்டின் முதல் பெண் ஆளுநருமான திருமிகு.பாத்திமா பீவி அவர்கள்,
- 'இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை' என அழைக்கப்பட்ட வேளாண் விஞ்ஞானி பத்மஸ்ரீ திரு.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள்,
- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இதய தெய்வம் அம்மா அவர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக இருந்தவரும், எம்.ஜி.ஆர் கழகத் தலைவருமான மூத்த அரசியல்வாதி திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள்,
- மார்க்சிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச்செயலாளரும், மூத்த அரசியல்வாதியுமான திரு.சீதாராம் யெச்சூரி,
- சுதந்திர போராட்ட வீரரும், இடது சாரி இயக்கத்தின் அடையாளமுமான தோழர் திரு.என்.சங்கரய்யா அவர்கள்,
- திரையுலகம் மட்டுமல்லாது தமிழக அரசியல் வரலாற்றிலும் தனக்கென தனி அடையாளத்தை பதித்த தே.மு.தி.க தலைவர் கேப்டன் திரு.விஜயகாந்த் அவர்கள்,
- ஆன்மீகவாதிகளில் தனக்கென தனி இடத்தை வைத்திருந்த பங்காரு அடிகளார் அவர்கள்,
- இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தலைவர் திரு.எஸ்.எம்.பாக்கர் அவர்கள்,
- நாட்டின் மிகப்பெரிய தொண்டு நிறுவன மருத்துவமனைகளில் ஒன்றான சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் நிறுவனர் பத்மபூஷன் திரு.பத்ரிநாத் அவர்கள்,
- இயற்கை விவசாயத்தின் மீது பேரன்பும் பெரும் ஆர்வமும் கொண்டிருந்த பத்ம ஸ்ரீ மூதாட்டி திருமிகு.பாப்பம்மாள் அவர்கள்,
- ராமோஜி மற்றும் ஈநாடு குழும நிறுவனங்களின் தலைவரும், திரைப்பட தயாரிப்பாளருமான திரு.ராமோஜிராவ் அவர்கள்,
- தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவையின் தலைவர் திரு.வெள்ளையன் அவர்கள்,

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

- இலங்கையின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான ஐயா திரு.இரா.சம்பந்தன் அவர்கள்,
- தமிழ்நாட்டைச் சேர்ந்த இஸ்ரோவின் ரேஞ்ச் ஸ்பீக்கர் திருமதி.வளர்மதி அவர்கள்,
- உலக வரலாற்றில் தமிழர்களின் மதிப்பை உயர்த்துவதற்காக பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்ட திரு.ஒரிசா பாலு அவர்கள்,
- மாணவர்களுக்கு கல்வி அறிவோடு தெய்வ பக்தியும் அவசியம் என்பதை எடுத்துரைத்த கோவை காமாட்சிபுரி ஆதீனம் ஞானகுரு சாக்தஸ்ரீ சிவலிங்கேஸ்வரர் சுவாமிகள்,
- தேவர் குலக் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் திரு.சண்முகையா பாண்டியன் அவர்கள்,
- வயநாடு நிலச்சரிவு உட்பட கடந்த ஓர் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்துகளில் உயிரிழந்தவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மறைந்த பிரமுகர்களுக்கும் இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழக சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் திரு.S.P.சங்கர் அவர்கள், கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மன்ற துணைச்செயலாளரும், முன்னாள் மாவட்டக் கழக செயலாளருமான திரு.K.மாதேவா அவர்கள், கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்ற துணைத்தலைவரும், கரூர் கிழக்கு முன்னாள் மாவட்டக் கழக செயலாளருமான சேப்ளாப்பட்டி திரு.எஸ் மணிமாறன் மற்றும் கழகத்திலும், சார்பு அணிகளிலும் பல்வேறு நிலைகளில் பொறுப்பு வகித்து, கழகம் காத்து, உடல்நலக்குறைவாலும், விபத்துகளாலும் உயிரிழந்த கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் இப்பொதுக்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

| வ. எண் | பெயர் மற்றும் பொறுப்பு |
|---|---|
| 1 | **திரு.N.நல்லுவேலுச்சாமி**<br>மாவட்டக் கழக அவைத்தலைவர், தேனி வடக்கு மாவட்டம் |
| 2 | **திரு.N.சிவக்குமார்**<br>மாவட்டக் கழக அவைத்தலைவர், கோவை தெற்கு மாவட்டம் |
| 3 | **திரு.C.செல்லக்கண்ணு**<br>மாவட்டக் கழக அவைத்தலைவர், ஆவுடையார் கோவில் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் |
| 4 | **திரு.M.P.முத்துசாமி**<br>மாவட்டக் கழக அவைத்தலைவர், புதுக்கோட்டை மத்திய மாவட்டம் |
| 5 | **திரு.N.மாரிச்சாமி**<br>மாவட்டக் கழக துணைச்செயலாளர், விருதுநகர் மத்திய மாவட்டம் |
| 6 | **திரு.S.முத்தையன்**<br>மாவட்டக் கழக பொருளாளர், கடலூர் மேற்கு மாவட்டம் |
| 7 | **திரு.B.குமரகுரு**<br>இலால்குடி சட்டமன்றத் தொகுதி பொதுக்குழு உறுப்பினர், திருச்சி புறநகர் தெற்கு மாவட்டம் |
| 8 | **திரு.R.ராஜாங்கம்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர், மதுரை மாநகர் வடக்கு மாவட்டம் |
| 9 | **திரு.R.ரவிகுமார்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.இளைஞர் அணி செயலாளர், தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 10 | **திருமதி.S.யோகப்பிரியா**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர், திருப்பூர் மாநகர் மாவட்டம் |
| 11 | **திரு.மக்தூம்**<br>மாவட்ட இலக்கிய அணி செயலாளர், தென்காசி வடக்கு மாவட்டம் |
| 12 | **திரு.குமார்**<br>மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர், திருச்சி புறநகர் வடக்கு மாவட்டம் |
| 13 | **திரு.M.பாஸ்கரன்**<br>மாவட்ட நெசவாளர் அணி செயலாளர், இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் |
| 14 | **திரு.L.சுந்தரம்**<br>மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலப்பிரிவு செயலாளர், தருமபுரி மாவட்டம் |
| 15 | **திரு.M.சுப்பிரமணியம்**<br>நாகர்கோவில் வடக்கு பகுதிக் கழக செயலாளர், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| | |
|---|---|
| 16 | **திரு.M.நேரு**<br>BP அக்ரஹாரம் பகுதிக் கழக செயலாளர், ஈரோடு மாநகர் கிழக்கு மாவட்டம் |
| 17 | **திரு.K.சூரிய ஆச்சாரி**<br>அல்லாபுரம் கிழக்கு பகுதிக் கழக செயலாளர், வேலூர் மாநகர் மாவட்டம் |
| 18 | **திரு.P.பாண்டி**<br>திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியக் கழக செயலாளர், மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 19 | **திரு.பா.கலிங்கராயன்**<br>கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர், திருநெல்வேலி புறநகர் மேற்கு மாவட்டம் |
| 20 | **திரு.தொ.கருப்பன்**<br>மங்கலூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், கடலூர் வடக்கு மாவட்டம் |
| 21 | **திரு.K.B.பெள்ளன் (எ) பெள்ளராஜ்**<br>உதகமண்டலம் ஒன்றியக் கழக செயலாளர், நீலகிரி மாவட்டம் |
| 22 | **திரு.S.A.குமார்**<br>மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் |
| 23 | **திரு.M.செல்லபாண்டியன்**<br>விருதுநகர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர், விருதுநகர் மத்தியம் மாவட்டம் |
| 24 | **திரு.S.எவான்ஸ்பால்**<br>மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர், விழுப்புரம் வடக்கு மாவட்டம் |
| 25 | **திரு.K.முத்து முகமது யூனஸ்**<br>மேல்விஷாரம் நகரக் கழக செயலாளர், ராணிப்பேட்டை மாவட்டம் |
| 26 | **திரு.K.தேவமகேஸ்வரன்**<br>சிங்கம்புனரி பேரூர் கழக செயலாளர், சிவகங்கை மாவட்டம் |
| 27 | **திரு.S.மணி**<br>கருப்பூர் பேரூர் கழக செயலாளர், சேலம் வடக்கு மாவட்டம் |
| 28 | **திரு.R.முருகேசன்**<br>பாலசமுத்திரம் பேரூர் கழக செயலாளர், திண்டுக்கல் மேற்கு மாவட்டம் |
| 29 | **திரு.வே.செந்தில்குமார்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்றம் தலைவர், விருதுநகர் மத்திய மாவட்டம் |
| 30 | **திரு.P.ஜெகன்**<br>மாவட்ட இதயதெய்வம் அம்மா தொழிற்சங்க பேரவை தலைவர்,<br>திருவள்ளூர் தெற்கு மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| | |
|---|---|
| 31 | **திரு.A.முருகையன்**<br>மாவட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்றம் இணைச்செயலாளர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 32 | **திரு.வே.ராமர்**<br>மாவட்ட இதயதெய்வம் அம்மா பேரவை இணைச்செயலாளர், விருதுநகர் மத்திய மாவட்டம் |
| 33 | **திரு.P.சந்தானமூர்த்தி**<br>மாவட்ட மாணவர் அணி இணைச்செயலாளர், திண்டுக்கல் மேற்கு மாவட்டம் |
| 34 | **திரு.ர.முத்து வினோத்குமார்**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர், தேனி தெற்கு மாவட்டம் |
| 35 | **திரு.S.ராகுல்**<br>மாவட்ட இளைஞர் பாசறை இணைச்செயலாளர், திருச்சி மாநகர் மாவட்டம் |
| 36 | **திரு.ப.பெருமாள்**<br>மாவட்ட இதயதெய்வம் அம்மா பேரவை துணைத் தலைவர், தேனி தெற்கு மாவட்டம் |
| 37 | **திரு.R.காசிராஜன்**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச்செயலாளர், மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 38 | **திரு.மு.ஆனந்தராஜ்**<br>மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச்செயலாளர், தேனி தெற்கு மாவட்டம் |
| 39 | **திரு.T.ராஜ் குமார்**<br>மாவட்ட விவசாயப் பிரிவு துணைத் தலைவர், விருதுநகர் மேற்கு மாவட்டம் |
| 40 | **திரு.ஏ.முருகேசன்**<br>நல்லூர் பகுதிக் கழக அவைத்தலைவர், திருப்பூர் மாநகர் மாவட்டம் |
| 41 | **திரு.E.ராஜா**<br>ரத்தினபுரி பகுதிக் கழக இணைச்செயலாளர், கோவை மாநகர் மாவட்டம் |
| 42 | **திரு.அண்ணாமலை**<br>வேலூர் கிழக்கு பகுதி 37வது வட்டக் கழக செயலாளர், வேலூர் மாநகர் மாவட்டம் |
| 43 | **திரு.D.ராதா கிருஷ்ணன்**<br>குறிஞ்சிபாடி மேற்கு ஒன்றிய கழக அவைத்தலைவர், கடலூர் கிழக்கு மாவட்டம் |
| 44 | **திருமதி.S.சாந்தா**<br>திருமருகல் தெற்கு ஒன்றிய கழக இணைச்செயலாளர், நாகப்பட்டினம் மாவட்டம் |
| 45 | **திரு.J.வாசு (எ) சீனிவாசன்**<br>பெருந்துறை கிழக்கு ஒன்றிய கழக துணைச்செயலாளர், ஈரோடு மாநகர் மேற்கு மாவட்டம் |
| 46 | **திரு.K.முத்துராமலிங்கம்**<br>மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழக பொருளாளர், சிவகங்கை மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தலைமைக் கழகம் சென்னை - 600 014

| | |
|---|---|
| 47 | **திரு.N.அருணகிரி**<br>நீடாமங்கலம் வடக்கு ஒன்றிய கழக மாவட்ட பிரதிநிதி, திருவாரூர் மாவட்டம் |
| 48 | **திரு.K.A.இப்ராகீம்**<br>மணப்பாறை நகர 20வது வார்டு கழக செயலாளர், திருச்சி புறநகர் தெற்கு மாவட்டம் |
| 49 | **திரு.மா.வில்லாயுதம்**<br>சங்கரன்கோவில் வடக்கு ஒன்றிய பெருமாள்பட்டி ஊராட்சிக் கழக செயலாளர்,<br>தென்காசி வடக்கு மாவட்டம் |
| 50 | **திரு.S.ராஜலிங்கம்**<br>தா.பழூர் வடக்கு ஒன்றிய சோழன்மாதேவி ஊராட்சி கழக செயலாளர், அரியலூர் மாவட்டம் |
| 51 | **திரு.V.பிச்சை பிள்ளை**<br>கும்பகோணம் கிழக்கு ஒன்றிய கோவிலாச்சேரி ஊராட்சி கழக செயலாளர்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 52 | **திரு.P.ராஜேந்திரன்**<br>நாங்குநேரி ஒன்றிய சிங்கநேரி ஊராட்சி கழக செயலாளர்,<br>திருநெல்வேலி மாநகர் மாவட்டம் |
| 53 | **திரு.P.கிருஷ்ணன்**<br>ஆழ்வார்திருநகரி மேற்கு ஒன்றிய கடையனோடை ஊராட்சி கழக செயலாளர்,<br>தூத்துக்குடி தெற்கு மாவட்டம் |
| 54 | **திரு.R.இளங்கோவன்**<br>அம்மாபேட்டை மேற்கு ஒன்றிய கொத்தங்குடி ஊராட்சி கழக செயலாளர்,<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 55 | **திரு.M.சுந்தரம்**<br>கள்ளிக்குடி கிழக்கு ஒன்றிய கொக்குளம் ஊராட்சி கழக செயலாளர்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 56 | **திரு.A.தங்கபாண்டி**<br>T.கல்லுப்பட்டி மேற்கு ஒன்றிய S.கீழப்பட்டி ஊராட்சி கழக செயலாளர்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 57 | **திரு.M.முருகன்**<br>ஸ்ரீபெரும்புதூர் மேற்கு ஒன்றிய மேல்மதுரமங்கலம் ஊராட்சிக் கழக செயலாளர்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் |
| 58 | **திரு.S.பெரியகருப்பன்**<br>செல்லம்பட்டி ஒன்றிய நடுமுதலைகுளம் ஊராட்சிக் கழக செயலாளர்,<br>மதுரை புறநகர் தெற்கு மாவட்டம் |
| 59 | **திரு.P.கருப்பையா**<br>கல்லல் தெற்கு ஒன்றிய வேப்பங்குளம் ஊராட்சிக் கழக செயலாளர், சிவகங்கை மாவட்டம் |
| 60 | **திரு.M.போஸ்**<br>மேலூர் மேற்கு ஒன்றிய புலிப்பட்டி ஊராட்சிக் கழக செயலாளர்,<br>மதுரை புறநகர் வடக்கு மாவட்டம் |

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்
தலைமைக் கழகம்
சென்னை - 600 014

| | |
|---|---|
| 61 | **திரு.S.தளவாய்மணி**<br>நாங்குநேரி ஒன்றிய கூந்தன்குளம் ஊராட்சிக் கழக செயலாளர்,<br>திருநெல்வேலி மாநகர் மாவட்டம் |
| 62 | **திரு.P.பிரபு**<br>செல்லம்பட்டி ஒன்றிய போடுவார்பட்டி ஊராட்சிக் கழக செயலாளர்,<br>மதுரை புறநகர் மாவட்டம் |
| 63 | **திரு.G.கண்ணன்**<br>வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றிய தாயில்பட்டி ஊராட்சிக் கழக செயலாளர்,<br>விருதுநகர் மத்திய மாவட்டம் |
| 64 | **திரு.K.ரோஸ்தேவர்**<br>ஆண்டிபட்டி பேரூர் கழக பொருளாளர், தேனி வடக்கு மாவட்டம் |
| 65 | **திரு.M.அருணஜடேசன்**<br>திருப்பனந்தாள் பேரூர் கழக அவைத்தலைவர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 66 | **திரு.K.முனியசாமி**<br>மண்டபம் பேரூர் கழக அவைத்தலைவர், இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் |
| 67 | **திரு.G.சுகுமார்**<br>மெலட்டூர் பேரூர் கழக துணைச்செயலாளர், தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் |
| 68 | **திரு.S.பூல்ராஜ்**<br>ஆறுமுகநேரிபேரூர் 7வது வார்டு கழக செயலாளர், தூத்துக்குடி புறநகர் மாவட்டம் |
| 69 | **திரு.M.பாண்டி**<br>சிவகாசி வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஆண்கள் பிரிவு செயலாளர்,<br>விருதுநகர் மத்தியம் மாவட்டம் |

**முன்மொழிபவர்கள்**

**திரு.K.பாண்டுரங்கன்** அவர்கள்,
கழக அமைப்பு செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு.U.C.ஆறுமுகம்** அவர்கள்,
கழக அமைப்பு செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

**திரு.S.D.சேகர்** அவர்கள்,
புதுச்சேரி மேற்கு மாநிலக் கழக செயலாளர்

**திரு.K.முருகன்** அவர்கள்,
புதுச்சேரி கிழக்கு மாநிலக் கழக செயலாளர்

**வழிமொழிபவர்கள்** | **அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும்**

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ★ தலைமைக் கழகம் ★ சென்னை - 600 014